
விலை சதம்-10

வி. பொன்னம்பலம் கட்சியின்
**விஷமத்தனம்** —பட விளக்கம் 4ம் பக்கம்



# சுதந்திரன்
# SUTANTIRAN

வ. ஆ. 2001, வைகாசி 12 உ செவ்வாய் (26 5-70) ற. அவ்வல் பிறை19—புத்தகம் 24 இதழ் 47

தமிழ் மொழியும் தமிழ் நிலமும் காப்பாற்றப்பட

# தமிழரசை
# தேர்ந்தெடுங்கள்!

## தமிழ் பேசும் வாக்காளர்களுக்கு பெரியவரின் உருக்கமான வேண்டுகோள்!

‘தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளை மீண்டும் வென்றெடுப்ப தற்கும்—மொழி, பிரதேச உரிமைகளை பாதுகாக்கவும் — சுயநிர்ணய சுதந்திர உரிமைக் கோரிக்கை வலுப்பெறவும், தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையை யும் ஒருமைப்பாட்டையும் நிலைநாட்டுவதற்கும் தமிழரசுக்கட்சி நிறுத்தியுள்ள 19 பேரையும் ஒருவர்தானும் பாக்கியில்லாது தெரிவு செய்யும் வண்ணம் பணி வுடன் வேண்டுகிறேன்.’



இவ்வாறுதமிழரசுத்தந்தை திரு. சா. ஜே. வே. செல்வ நாயகம் நாளை நடைபெறும் பொதுத் தேர்தலையொட்டி தமிழ் பேசும் மக்களுக்கு சுதந்திரன் மூலம் விடுத்துள்ள விசேட வேண்டுகோள் ஒன்றில் கூறியுள்ளார்.

அவரது வேண்டுகோள் வருமாறு:—

நாளை நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல் இந்நாட்டின் வரலாற்றில் அதி முக்கியத்துவம் வாய்ந்ததென்ப தில் எள்ளத்தனையும் சந்தேகமில்லை. பெரும்பான்மை மக்களான சிங்களச் சகோதரர்கள் இடதுசாரிக் குழுவினரா வலதுசாரிக் குழுவினரா அதிகாரப் பொறுப்பை ஏற்பது என்ற ப்லப்பரீட்சையாக இத்தேர்தலைக் கருதுகிறார்கள். ஆனால் தமிழ் பேசும் மக்களாகிய எம்மைப் பொறுத்தவரையில் இவ்வதிகாரப் போட்டியில் பங்கற்றவர்களாக, ஓர் அடிமை இனமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனவே நாம் இத் தேர்தலை அணுகும் முறையே வேறு. எமது சுய நிர்ணய சுதந்திர உரிமையை நிலைநாட்டும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓர் மாபெரும் பொதுமக்கள் வாக்கெடுப்பாக எமது உரிமைப் போராட்டத்தின் ஓர் அங்கமாக நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலை நாம் அணுகவேண்டும்.

### கட்டுப்பாட்டின் அவசியம்

அதேநேரத்தில் சிங்களச் சகோதரர்கள் மத்தியில் நடைபெறும் இந்த அதிகாரப் போட்டியின் பயனாகத் தமிழ்ப் பேசும் இனத்தின் சில பல உரிமைகளை பெற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் இத்தேர்தலின் பின் மீண்டும் ஏற்படக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன.

இந்த நேரத்தில் தமிழ்ப் பேசும் பிரதிநிதிகள் கட்டுப்

(3ம் பக்கம் பார்க்க)

## செல்வா தெளிந்த மதியினர்; அவரது சீடர்கள் ஆற்றல் மிக்கோர்

### சிலம்புச் செல்வர் ம.பொ.சி. கூறுகிறார்



இலங்கையில் நிலையான ஆட்சி ஏற்படவோ தமிழர் சிங்களவர் உறவு வளரவோ சமஷ்டி வழி ஒன்றுதான் மார்க்கம். இதை சிங்கள ஆட்சியினர் உணர வேண்டும்.

ஈழத்துக் காந்தி யென்று அழைக்கப்படும் திரு. செல்வநாயகம் அவர்கள் தெளிந்த மதியினர். அவரைப் பின்பற்றுவோர் ஆற்றல் மிக்க மாவீரர்கள். அவர்கள் வழியைத் தமிழ் மக்கள் பின்பற்றினால் சமஷ்டிக் கோரிக்கை ஒருநாள் வெற்றி பெறுவது திண்ணம்.

—இவ்வாறு சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் எம். எல். ஏ. சுதந்திரனுக்கு அனுப்பியுள்ள ஒரு செய்தியில் கூறியுள்ளார்.

## தமிழரசு 18 தொகுதிகளை கைப்பற்றும் தமிழ் நாடு பத்திரிகை தீர்க்கதரிசனம்!

### தமிழும் தமிழரும் தலைநிமிர்ந்து வாழ செல்வாவின் கரங்களை வலுப்படுத்த வேண்டுகோள்!

நாளை நடை பெறவிருக்கும் பொதுத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சி 18 ஸ்தானங்களைக் கைப்பற்றும் என்று தீர்க்கதரிசனம் கூறியிருக்கிறது.

தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் ‘சங்கொலி’ எனும் இடதுசாரி சார்பு வார இதழ். இந்தப் பத்திரிகை 1967ம் ஆண்டு தமிழ் நாட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தி. மு. க. ஆட்சியைக்கைப்பற்றும் என்பதை முன்கூட்டியே தீர்க்கதரிசனம் கூறியிருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

‘சங்கொலி’யில் 5-5-70 இதழில் ‘மதிமுதன்’ என்பவர் இலங்கையில் பொதுத் தேர்தல் என்னும் தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையின் விபரம் வருமாறு:—

27-5-70 தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு 18 இடங்கள் கிடைக்கும் என்று அரசியல் முன்னோடிகள் தீர்க்கதரிசனம் கூறுகின்றனர்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

# எண்ணம்

## வீடு

நாளைக் காலை.........!

உதிக்கின்ற உதயசூரியனின் ஒளிக்கிரணங்கள் உங்கள் உள்ளங்களிலே உரிமையுணர்வை ஊட்டிவிடட்டும்!

காற்றிலே மிதந்து வரும் ஆலயமணியின் ஓசை உங்கள் செவிப்பறைகளில் வீழ்ந்து சுதந்திரம் சுதந்திரம் என்று ஒலிக்கட்டும்!

பாடும் குயில்கள் எல்லாம் பைந்தமிழின் பெருமையையே பாடட்டும்!

நாடும் மொழியும் நமதிருகண்கள் என்றபேருணர்ச்சி உங்கள் நெஞ்சங்களிலே பொங்கி வழியட்டும்!

தமிழ், தமிழன், தமிழ் நாடு—என்ற ஆர்வத்தீ மூண்டெழட்டும்! இதயத்தை கையில்பிடித்தபடி ஒரு கணம் எண்ணிப்பாருங்கள்!

ஐயிரண்டு திசைமுகத்தும் தன்புகழைவைத்த இராவணன் என்னும் தமிழ் மறவன் ஆண்ட நாடு இது!

இந்நாட்டிலே இன்று தமிழினத்தவன் அடிமை!

அடிமையிலும் முழு அடிமை!

கப்பலேற்றப்பட்டு கள்ளத்தோணியில் இந்நாடுவந்து சேர்ந்த விஜயனின் பரம்பரைக்கு நாங்கள் எழுதிவைக்கப் பட்டுள்ள அடிமைகள்!

ஒற்றை ஆட்சி அரசியலமைப்பு முறைதான் எங்களை இந்நாட்டுச் சிங்களவனின் அடிமையாக்கிவிட்டிருக்கிறது...!

இதனால்தான் இன்று மொழி, நிலம், குடியுரிமை மற்றும் உரிமைகளை இழந்து நடுத்தெருவில் கைபிசைந்து நாதியற்று நிற்கிறோம்!

எங்களைச் சிங்களவனுக்கு அடிமையாக்கியவர்கள்—நாம் என்றென்றும் சிங்களவனுக்கு அடிமைகளாக—அவன் போடும் எச்சில் இலையை நக்கியே வாழ வேண்டும் என்னும் மானங்கெட்ட 'கொள்கை' பேசியபடி தமிழ் காங்கிரஸ் என்று கூறப்படும் சிங்களக் கட்சியினர் துணிச்சலுடன் உங்களிடம் வாக்குக் கோரி இன்று கையேந்துகிறார்கள்!

ஒற்றையாட்சித் திட்டத்தை ஏற்று நம்மை சிங்களவனின் மீளா அடிமைகளாக்கிய படுதுரோகி சுந்தரலிங்கமும் வாக்குப் பிச்சை கோருகிறார்! தமிழினத்தை கபளீகரம் செய்து விழுங்கிவிடத் துடிக்கும் சிங்களகட்சிகளான யூ. என். பி.—சிறீலங்கா—சமசமாஜ—கம்யூனிஸ்ட் கட்சிகளும் வாக்குக் கோரிநிற்கின்றன.

நமது ஆதரவினை பெற்றே நம்மை அழித்தொழிக்க முன் நிற்கிறார்கள் இவர்கள்!

இதில் ஏமாறுவதற்கு தமிழ் பேசும் மக்கள் என்ன ஏமாளிகளா? வெறும் சோமாரிகளா?

அதோ உங்களுக்கு நேரிய வழி காட்டுகிறார் மெலிந்த உருவமும் தள்ளாடும நடையும் தள்ளாடாத உள்ளமும் கொண்ட ஓர் பெரியவர்!

தியாகம், தன்னல மறுப்பு—தமிழ் பாசம்—விடுதலை ஆவேசம் யாவும் அவரது தீட்சண்யமான முகத்தில் தெரிகின்றன!

அந்தப் பெரியவர் உங்களுக்கு புதியவரல்லர்!

நீங்கள் கஷ்டப்பட்ட போது—நீங்கள் நம்பிய தலைவர்கள் உங்களை நட்டாற்றில் கைவிட்டபோது வழித்துணையாக வந்து சேர்ந்த புனித மனிதர் அவர்.

அந்த மனிதரின் மந்தகாசப்புன்னகையில் மயங்கி, இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் அவர் பின்னால் போகிறார்கள்!

அவர் உதடு அசைத்துச் சிந்தும் ஒவ்வொரு வார்த்தைகளையும் 35 இட்சம் ஈழத்தமிழினத்தவரின் வார்த்தைகளாக உலக மக்கள் எடுத்துக்கொள்ளுகிறார்கள்!

ஆம், ஈழத் தமிழினத்தின் தேசிய எழுச்சியின் மொத்தவடிவமே அப் பெரியவர்!

சுயநலமும் சூதுவாதும் அற்றவர் அவர்!

அவரை நம்பியவர்கள் யாரும் இதுவரை ஏமாந்ததில்லை!

அவரும் யாரையும் ஏமாற்றியதில்லை!

அவர் தியாகப் பெருஞ்சுடர்; அஹிம்சைக்கோர் அண்ணல்!

பதவிகளும் பட்டங்களும் அவரது குறிக்கோளில் எந்நாளும் குறுக்கிட்டதில்லை!

கடமை கண்ணியம் கட்டுப்பாடு—அவர் ஏந்தும் முப்பெரும் ஆயுதங்கள்! நேர்மையும், தூய்மையும் அவரது இரு விழிகள்!

தமிழர் நாட்டில் தமிழர் ஆட்சியை நிலை நாட்டி தமிழ் அன்னைக்கு மணி மகுடம் பெற்றுத் தருவதே அவரது வாழ்வின் ஒரே இலட்சியம்!

தமிழினத்துக்காக—தமிழ் மொழிக்காக தன் இயக்கத் தோழர்களுடன பல தடவைகள் சிறை சென்றவர் அவர்!

அவரால்தான் ஈழத் தமிழினம் அழிவிலிருந்து தப்பிப் பிழைத்தது.

குன்றாத உறுதியுடனும் குலையாத கொள்கையுடனும் விடுதலைப் பாதையிலே கடந்த 20 ஆண்டுகளாக மக்களை வழி நடத்தி வருபவர் அவர்!

அவர்தான் ஈழத் தமிழகத்தின் தந்தை செல்வநாயகம் அவர்கள்!

அவருக்குப் பின்னால் அதோ அணி வகுத்து நிற்கிறார்கள் 18 தளபதிகள்.

இப்பெரும் படைக்கு ஈடாக வேறு எப்படை உண்டு இங்கே?

அவர்கள் தமிழினத்துக்கு தனி வீடு கட்டுவதை இலட்சியமாகக் கொண்டவர்கள்

அதனால் அவர்களது சின்னமும் வீடு!

வீடின்றேல் ஈழத் தமிழினத்துக்கு எஞ்சுவது சுடுகாடுதான்!

வீட்டை மறவாதீர்கள்! அப்போதுதான் நம் மொழியும் இனமும இந்நாட்டில் தப்பிப் பிழைக்கும்—தலை நிமிர்ந்து வாழும்!

# தமிழ் மக்கள் தமிழரசுக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்?

1948ம் ஆண்டு திரு ஜீ. ஜீ. மந்திரிப் பதவி மயக்கத்தில் வீழ்ந்து மலைநாட்டுத் தமிழர்களுக்கு எழுத்தில் கொடுத்த உறுதி மொழிகளை மீறி—10 லட்சம் மலைநாட்டுத் தமிழர்களை நாடற்றவராக்கும் சட்டங்களை ஆதரித்துத் தமிழினத்தின் முதுவில் குத்திய போது அவர்களுக்குத் துணிச்சலுடன் வழிகாட்ட முன் வந்தது இலங்கைத் தமிழரசுக் கட்சி!

ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் தமிழ்ப் பேசும் மக்கள் சிங்கள மக்களின் அடிமைகளாக என்றென்றும் அல்லற்பட வேண்டியதில்லை. சமஷ்டி அரசியலமைப்பின் கீழ் தமிழ்ப் பகுதிக்குப் சுயாட்சி உரிமை கோருவோம் என்று இனத்துக்குப் புதிய பாதையைக் காட்டி உரிமை முழக்கம் எழுப்பிய கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சி

ஈழத் தமிழ்ப் பேசும் மக்கள் தம் மொழி வழிப்பட்ட இன ஒற்றுமையை மறந்து—பிரதேச வாரியான வேறுபாடுகளாலும் கூறுபட்டு நின்ற நேரத்தில்—அவர்களையெல்லாம் ஒரே தலைவனின் கீழ் ஒன்றாகப் பிணைத்து சக்தி வாய்ந்த தேசிய இனமாகக் கட்டியெழுப்பியது இலங்கைத் தமிழரசுக் கட்சி!

தமிழினத்தைக் கூறு போட்டு அதன் மூலம் அரசியல் சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டு சிங்கள ஆட்சிக்கு தமிழ் மக்களை விலை கூறி விற்று வந்த எட்டப்பர்களின் முகமூடிகளையெல்லாம் கிழித்தெறிந்து மக்கள் முன் அவர்களது சுய உருவத்தை அம்பலப்படுத்தியது இலங்கைத் தமிழரசுக் கட்சி.

சேர். பொன். இராமநாதன், சேர். அருணாசலம் போன்ற தலைவர்களவேலேயே உருவாக்க முடியாத தமிழ் இன ஒற்றுமையை ஒன்று பட்ட உணர்ச்சியை விடுதலை வேட்கையை வளர்த்து விட்டிருக்கும் கட்சி இ. அ. கட்சி!

சீமான்களிடத்திலும், பூமான்களிடத்திலும் சிக்கிக் கொண்டிருந்த ஈழத் தமிழ் நாட்டு அரசியலை சாதாரண தமிழ் மக்களிடம் கொண்டு வந்து அரசியல் விழிப்பை ஏற்படுத்திய கட்சி எது? அரண்மனையிலிருந்த ஈழத் தமிழ்நாட்டு அரசியலை ஆலமரத்தடிக்குக் கொண்டு வந்த கட்சியெது? இலங்கைத் தமிழரசுக் கட்சியே'

பாராளுமன்றத்திற்குச் செல்வது சிங்களத் தலைவர்களிடம் சரணடைந்து அரை முழு மந்திரிப் பதவிகளையும் பெற்று, தமிழ்ப் பகுதிக்கு அற்பசலுகைகளை—பாலங்களை மதகுகளையும்—அஞ்சல் அலுவலகங்களையும்—பெறுதற்குத்தான் என்ற சித்தாந்தத்தை மாற்றியமைத்து பாராளுமன்றத்திற்குச் செல்வது தமிழினத்தின் விடுதலைக் குரலை எழுப்புதற்கு—தமிழுரிமை முழக்கம் செய்தற்கு—இனத்திற்கு ஏற்படும் ஆபத்துக்களை எதிர்த்துப் போராடுவதற்கு-என்ற நிலையைத் தோற்றுவித்தது தமிழரசுக் கட்சி!

மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றப் பிரதிநிதிகளானவர்கள்—அமைச்சர்களானவர்கள்—திமிர் பிடித்து மக்களை மதிக்காது அசந்தை கொண்டு அலைந்த நிலையை மாற்றியமைத்து—பாராளுமன்ற உறிப்பினர்கள் மக்களின் தொண்டர்கள்—மக்களால் உருவாக்கப்பட்டவர்கள்—மக்களுக்காகத் தேவைப் படும்போது அடிபடவும்—உதைபடவும் சிதைப் படவும் சித்திரவதைப்படவும் தயாராக இருக்கிறார்கள் என்பதை யாதார்த்த பூர்வமாக நிருபித்துக் காட்டிய கட்சி இ. த. அ. கட்சி!

தமிழ்ப் பகுதியைச் சிங்களமயமாக்குவதற்கு யூ. என். பி. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் பேராபத்தினை உணர்ந்து தமிழ் பேசும் மக்களை முதன் முதலில் எச்சரிக்கை செய்தது இ. த. அ. கட்சி!

பதவி மயக்கத்திற் கிடந்த தமிழ்க் காங்கிரஸ் தலைவர்கள் சிங்கள ஆட்சிக்கு ஆலவட்டம் வீசியபடி சிங்களக் குடியேற்றத்தை எதிர்க்கத் துணிவற்று கோழைகளாய்க் கிடந்தபோது—இந்தச் சதித் திட்டத்துக்கு எதிராகத் தன்னந் தனியே போராடிய கட்சி யெது? இ. த. அ. கட்சி!

தமிழ்ப் பிரதேசம் சிங்களக் குடியேற்றத்தால் பறிபோகாமல் இயற்றைவரை தடுத்து நிறுத்திவைத்திருப்பது தமிழ்ப் பேசும் மக்கள் தமிழப் பிரதேசங்களில் பரந்து சென்று குடியேற வேண்டும் என்பதை தனது முக்கிய பிரச்சாரமாகக் கொண்டுள்ளதுமான கட்சி இ. த. அ. கட்சி!

கடுகு சிறிதானாலும் காரம் பெரிது என்பது போல—போதிய வளர்ச்சி பெருத நிலையிலும்—முதற் போராட்டமாக—தமிழுணர்ச்சி பொங்கியெழ—தமிழைப் பழித்த அப்போதைய பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலைக்கு 1953ம் ஆண்டே கறுப்புக் கொடி பிடித்த பொலிஸாரின் குண்டாந்தடியை ஏற்றுக்கொண்டு தியாக தழும்பு ஏற்றிய கட்சி இ. த. அ. கட்சி!

கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு—வாய்மை-நேர்மை—தியாக உள்ளம் படைத்த தலைவர்களையும் தொண்டர்களையும் கொண்ட கட்சி இ. த. அ. கட்சி!

தமிழர்களின் மொழியுரிமையை பாதிக்கும் தனிச் சிங்களச் சட்டம் 1956 ம் ஆண்டு ஜுன் 5ம் திகதி பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோது அதை எதிர்த்து இலங்கையிலேயே முதன்முதலாக காந்திகாட்டிய அறவழியில் காலிமுக கடற்கரையில் சத்தியாக்கிரகப் போராட்டம் நடாத்தி ஈழத் தமிழினத்திற்கு இழைக்கப் படும் அநீதியை அகில உலகிற்கும் பிரசித்தப் படுத்திய கட்சி இ. த. அ. கட்சி

காடையர்களின் கல்லடிகளாலும் பொல்லடிகளாலும் மண்டை பிளந்து இரத்தம் குபீரென பாய்ந்தபோதும் காலிமுக பசும் புற்றரை இரத்த ஆறாக ஓடிய போதும் அண்ணல் காந்தி காட்டிய அறவழிப்பாதையை மறவாது அமைதி காத்த தலைவர்களையும் தொண்டர்களையும் கொண்ட கட்சி இ. த. அ. கட்சி.

சீருடனும் சிறப்புடனும் செல்லமாக வளர்க்கப்பட்ட தம் அருமைப் பிள்ளைகள் காடையர்களால் கடுமையாகத் தாக்கப்பட்ட நேரத்திலும் எந்தவித உணர்ச்சியையும் காட்டாது—பதட்டப் படாது ஏற்றுக் கொண்ட போராட்டத்தில் கண்ணும் கருத்துமாக இருந்த பெசம்மல் செல்வநாயகத்தை வழிகாட்டியாகக் கொண்ட கட்சி இ. த. அ. கட்சி.

ஈழத் தமிழினம் தன் இழந்த உரிமைகளையும் சுதந்திரத்தையும், தியாகங்களின் மூலமும்-அஹிம்சைப் போராட்டங்களின் மூலமும் பெறமுடியும் என்ற நம்பிக்கையை யூட்டியுள்ளது இ. த. அ, கட்சி.

ஈழத்தின் சரித்திரமே காணாத அளவில் 1956ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மாபெரும் திருமலை பாத யாத்திரையை நடத்தி உள்ளத்தால் ஒன்றுபட்ட இலட்சக்கணக்கான தமிழ் பேசும் மக்களைக்கூட்டி நமது கொள்கை இதுதான்—கோரிக்கை இதுதான்—என்பதைச் சிங்களவர்களுக்கும்—உலகுக்கும் பிரகடனப் படுத்திய திருமலைத் தீர்மானத்தை நிறைவேற்றிய கட்சி இ. த. அ. கட்சி.

காலக் கெடு கொடுத்து உரிமையைக் கொடு—இன்றேல் உரிமைப்போராட்டம் ஆரம்பமாகும் என்று சிங்கள இனவெறி பிடித்து நின்ற பிரதமர் பண்டாவுக்குப் பகிரங்க எச்சரிக்கை கொடுத்தது இ. த. அ. கட்சி.

தனிச் சிங்களம் என்று வெறிபிடித்து ஆடிய பண்டா ஆட்சியைப் பணியவைத்து—வடக்கு-கிழக்கு மாகாணங்களின் ஆட்சி மொழி தமிழ் என்பதையும்—வடக்கு-கிழக்கு மாகாணங்கட்கு சுய ஆட்சி வழங்கும் பிரதேச சபை உருவாக்கப்பட வேண்டுமென்பதையும் ஒப்புக் கொள்ளும்படி செய்து தமிழர்களுடன் உடன்படிக்கை செய்யும்படி வைத்த கட்சி இ. த. அ. கட்சி.

தமிழ்ப் பகுதியில் தனிச் சிங்களத்தைத் திணிப்பதற்கு எதிர்புத் தெரிவுக்கும் அடையாளப் போராட்டமாக சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தைப் பல மாதங்களாக வெற்றிகரமாக நடத்தி அதனால் சிறைக் கொடுமையையும் ஏற்றுக்கொண்ட தியாகிகள் நிறைந்த கட்சி இ. த. அ. கட்சி.

இன்று மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தை மீறி தமிழ் எழுத்துப் பொறித்த கார் வண்டிகளை உபயோகித்து வரும் தலைவர்களைக் கொண்ட கட்சி இ. த. அ கட்சி.

'அரசபணி' என்று தமிழில் பொறிப்பது தபால் சட்டத்தை மீறுவதாகும் என்று தெரிந்தும் சட்டத்தை துச்சமாக மதித்து 'அரசபணி' என்று, கடித உறைகளின் தூய தமிழில் பொறிக்கும் தலைவர்களைக் கொண்ட கட்சி இ. த. அ. கட்சி.

தமிழ் மக்களின் சாபத்தீடாக இருந்துவரும் சாதி அரக்கனையும் தீண்டாமைப் பேயையும் அழித் தொழிக்கும் சமூக சீர் திருத்தப் பணியில் அந்தரங்க சுத்தியுடன் ஆரம்பத்திலிருந்தே உழைத்துவரும் கட்சி இ. த. அ. கட்சி!

சமூக ஏற்றத் தாழ்வுத் தடைச் சட்டம் நிறைவேறக் காரணயாக இருந்ததும், தீண்டாமையை ஒழிக்கும் நோக்குடன் சமபந்தி போசனம் நடத்தியதும் பாத யாத்திரைகள் மேற்கொண்டதும் வடபகுதியில் பல சைவ ஆலயக் கதவுகள் பல தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறக்கப்பட காரணமாக இருந்ததும் சிறுபான்மைத் தமிழர் ஒருவரையும் முதன் முதலாக மூதவை உறுப்பினராக்கியதும் இ. த. அ. கட்சி.

தீண்டாமை ஒழிப்பைத் தனது அடிப்படை இலட்சி

(3-ம் பக்கம் பார்க்க)

# தமிழரசைத் தேர்ந்தெடுங்கள்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடான ஒரு கட்சியாகத் தெரிவுசெய்யப்பட வேண்டியது அத்தியாவசியமாகும்.

ஒரே குரலில் தமது உரிமைக் கோரிக்கையை வலியுறுத்த தமிழ்ப் பேசும் மக்கள் ஒரு கொடியின் கீழ் திரண்டு அணிவகுத்து விட்டார்கள் என்பதை நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்கும் ஆட்சியாளருக்குமட்டுமல்ல, உலக அரங்கிற்கும் எடுத்துக் காட்ட வேண்டும்.

தமிழ்ப் பேசும் மக்களின் ஒத்துழைப்பின்றி நிலையான ஒரு ஆட்சியை இந் நாட்டில் ஏற்படுத்த முடியாது, என்பதை இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ்ப் பேசும் மக்கள் சார்பில் இந் நாட்டு ஆட்சியாளருக்கும், உலக அரங்கிற்கும் பல தடவைகள் பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டிவிட்டது.

நிலையான ஆட்சியை இந் நாட்டில் ஏற்படுத்தவேண்டுமெனில் தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளை வழங்கியே ஆகவேண்டும் என்ற நிலை தவிர்க்க முடியாததாகிவிட்டதென்பதைப் பலரும் உணர்கிறார்கள்.

தமிழ்ப் பேசும் மக்களின் சுய நிர்ணய சுதந்திர உரிமைக் கோரிக்கை வலுப்பெற தமிழரசுக் கட்சிக்கே வாக்களித்து, தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் 19 பேரையும் ஒருவர் தானும் பாக்கியில்லாது வெற்றிபெறச்செய்யும் வண்ணம் வேண்டுகிறேன்.

## வாக்குரிமை

தமிழரசு வேட்பாளரின் சாதாரண வெற்றி ஒரு பொருட்டல்ல. தமிழரசு வேட்பாளர்களுக்கு அமோகமான அதிகப்படி வாக்குகள் கிடைக்கவேண்டும். ஆகவே, வாக்காளர் பட்டியலிலுள்ள ஒவ்வொரு புனித வாக்கும் தமிழ்ப் பேசும் மக்களின் சுய நிர்ணய சுதந்திர உரிமை பெறுவது என்ற நோக்கத்திற்கு பயன்பட வேண்டும்.

தமிழ் பேசும் மக்களிற் சரிபாதிப்பேர் வாக்குரிமையற்றவர்களாக்கப்பட்டு விட்டார்கள். எஞ்சியிருக்கும் வட-கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்கள் பல உரிமைகளை ஏற்கனவே இழந்து விட்டார்கள். இதுவரை இழக்காமல் இருக்கும் ஒரே ஒரு உரிமை; வாக்குரிமை மட்டும்தான்; இந்த வாக்குரிமையைப் பயன்படுத்தி தமிழ்பேசும் மக்கள் தங்கள் உரிமைப் போராட்டத்தின் சில கட்டங்களை கடக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

எனவே தமிழ் பேசும் மக்களது ஒவ்வொரு வாக்கும் மிகப் பெறுமதியானது. அது பயன்படுத்தப்படாமல் அவம் போகக்கூடாது.

## ஒற்றையாட்சி ஒரு சிறைச்சாலை

இலங்கைவாழ் தமிழ்பேசுமினம் ஆட்சி அதிகாரம் அற்று, தம்முடைய தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் உரிமை அற்று,—அதாவது எந்த இனத்துக்கும் அத்தியாவசியம் தேவைப்படும் சிறிய சுயாட்சி உரிமை மறுக்கப்பட்டு ஒற்றை ஆட்சி அரசமைப்பின் கீழ் சிறையுண்டு கிடக்கிறது.

இந்த அரசமைப்பின் கீழ் பெரும்பான்மை மக்களாகிய சிங்கள இனத்துக்குள் மட்டும் கூடுதலான வாக்குகளைக் கவரக்கூடிய கட்சி, தமிழ் பேசும் மக்கள் உட்பட இலங்கை முழுவதையும் ஆளும் அதிகாரத்தை சம்பிரதாயமாகவும், சட்டபூர்வமாகவும் பெறுகிறது. இந்த தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் பெறுமதியற்றவையாகிவிடுகிறதென்றே கருத வேண்டியிருக்கிறது. ஆகவே தமிழ் பேசும் மக்களின் நல வுரிமைகள் புறக்கணிக்கப் படுகின்றன. இதனுல் தமிழ் பேசுமினம் புறக்கணிக்கப்பட்டு அடிமைநிலையை அடைகிறது. ஆட்சிப் பொறுப்பில் பங்கு கிடையாது. எனவே ஆளப்படும் அடிமை நிலைக்கு தமிழ் பேசுமினம் தள்ளப்படுகிறது.

## இணையாட்சியின் சிறப்பு

இந்த நிலை பல்வேறு இன மக்கள் வாழும் நாட்டில் ஒற்றையாட்சி அமைப்பில் இயல்பாக உள்ளது. ஆனுல் சமஷ்டி இணைப்பிலே இந்த நிலைக்கு இடமில்லை — தமிழ் பேசுமினம் தம்மை ஆட்சி புரிபவர்களை தமது வாக்குப் பலத்தைக் கொண்டே தீர்மானிக்கும் நிலை சமஷ்டி இணைப்பாட்சியில் தோன்றுகிறது. அதேபோன்று சிங்கள மக்களும் தமது தலைமையைத் தேடிக்கொள்கிறார்கள்.

சமஷ்டி இணைப்பாட்சியில் தமிழ் பேசும் மக்களின் சீவாதார உரிமைகளான மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு பாதுகாக்கப்படும் சந்தர்ப்பம் கிட்டுகிறது. சுய ஆட்சி உதயமாகிறது.

இன்றைய ஒற்றையாட்சி அரசமைப்பில் தமிழ் பேசுமினத்துக்கு இந்த மேலான சுயாட்சி நிலை மறுக்கப்பட்டுள்ளது;

இந்தஒற்றையாட்சி என்ற ஓரவஞ்சனை நிறைந்த ஆட்சியிலிருந்து எம்மினத்தை விடுவிப்பதற்கு இருக்கும் உறுதியான ஒரேயொரு மார்க்கம் இணைப்பாட்சி என்ற சமஷ்டி ஏற்படுத்துவது மட்டுமே.

எமது தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பு பெரும்பான்மைச் சிங்கள இனத்திடமிருந்து அகற்றப்படவேண்டும். எம்மை ஆக்கவும் அழிக்கவும் வல்ல உரிமை எமக்கே அளிக்கப்பட வேண்டும். தமிழ் பேசுமினத்தின் ஆட்சியை உருவாக்கும் பணி தமிழரசுக்கே கிடைக்க வேண்டும்.

## பொதுமக்கள் வாக்கெடுப்பு

இந்த இலட்சியமே எமது இதய கீதம் என்பதை இந் நாட்டில் ஏற்படப்போகும் ஆட்சிக்குமட்டுமல்ல, சிங்களச் சகோதரர்களுக்கும், வெளியுலகம் அனைத்திற்கும் நாம் ஆணித்தரமாக தெளிவாக்கிவிடவேண்டும். இந்த உண்மையை நிரூபிக்க எமக்குக் கிடைத்துள்ள ஒரு அரிய சந்தர்ப்பமே நடக்கவிருக்கும் பொதுத்தேர்தல்.

தனிப்பட்ட குரோதங்களோ, விரோதங்களோ, சிரமங்களோ, வசதியீனங்களோ ஒரு பேரினத்தின் கடமைக்குப் பெரிதல்ல.

எனவே தமிழ்பேசும் பேரினத்தின் வாக்காளப் பெருமக்களை மீண்டும் அதிவிநயத்துடன் வேண்டுகின்றேன்.

பொதுமக்களின் வாக்கெடுப்பு நன்னுள் மே 27ம் நாள். அப்பொன்னுளின் முதற்பணியாக, வாக்களிப்பு நிலையங்களில் இலட்சோப இலட்சமாக திரண்டு, தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்து தமிழ் பேசுமினத்தின் மகத்தான எதிர்காலத்துக்கு வழி அமையுங்கள் என்று தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

தமிழ் பேசும் மக்களுக்கு வேண்டுவதும் ஒரு வீடு! தமிழரசுக்கட்சியின் சின்னம் ஒரு வீடு!!

---



# அத்தானின் மண்டபம்

கண்ணே,

எல்லை மீறிய மகிழ்ச்சியோடு இந்த அஞ்சலை உனக்கு எழுதுகிறேன். தமிழரசுக் கட்சி போட்டியிடும் அத்தனை தொகுதிகளையும் நேரே போய் பார்த்து விட்டு கடைசியாக இதோ தந்தை செல்வாவின் தொகுதியில் வந்து நிற்கிறேன். எல்லாத் தொகுதிகளிலும் தமிழரசுக் கட்சி நிச்சயம் வெற்றிபெறும் கண்ணே!

ஒவ்வொரு தொகுதியிலும் காணப்படும் உற்சாகம் எவ்வளவு தெரியுமா? தமிழரசுக்கட்சி வேட்பாளர்களுக்கு சில ஊர்களில் காசால் மாலை போடுகிறார்கள். சில இடங்களில் இரத்தத்தால் திலகமிடுகிறார்கள். சில பகுதிகளில் ஆரத்தி எடுத்து வரவேற்கிறார்கள். சில மேடைகளில் மலரால் முடி சூட்டுகிறார்கள், சில கூட்டங்களில் தங்கத்தால் மாலை போடுகிறார்கள். சில இடங்களில் பண முடிப்புத் தருகிறார்கள். சில இடங்களில் தங்கத்தால் செய்யப்பட்ட வீட்டுச் சின்னத்தை அணிவித்து பாராட்டுகிறார்கள். தேர்தல் தமிழரசு வேட்பாளர்களைப் பொறுத்வரை மங்கலமான ஒரு திருவிழாக் காட்சியாகஇருக்கிறது கண்ணே! இருந்து பார்...ஒவ்வொரு தொகுதியிலும் அதிகப்படியான பல்லாயிரம் வாக்குகளால் தமிழரசுக்கட்சி வெற்றி வாகை சூடியே தீரும்!

என் ஜீவனே,

இந்தச் செய்தியை இன்று காலை நான் நமது தந்தை செல்வா அவர்களைச் சந்தித்துக் கூறிய போது அவர் எவ்வளவு இனிமையான ஒரு சிரிப்பை அவிழ்த்தார் தெரியுமா? கோபிக்காதே—உன்னுடைய சிரிப்பை விட அது பன் மடங்கு அழகாக இருந்தது!

கண்ணே,

தமிழரசுக்கட்சியின் வெற்றி விழாநாளன்று நானும் நீயும் நமது மண்டபத்தில் வழக்கம் போல் சந்திப்போம். அன்று, தமிழரசுக் கட்சிக்காக உழைத்த எனக்கு இலட்சிய மங்கையான நீ என்ன பரிசு தரப்போகிருய்...? ஓகோ...நாணத்தால் வளைகிருயா? அப்பாடா! என்ன அழகான வெட்கம்!

அன்புள்ள......

அத்தான்

---

# தமிழ் மக்கள்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யங்களில் ஒன்ருகவே ஏற்றுக்கொண்டுள்ள கட்சி இ. த. அ. கட்சி.

தடுப்புக் காவலில் மாதக்கணக்காக வாடியும் காரக்கிருகத்தில் சித்திர வதைப்பட்டும் மனைவியை—மக்களை—தாயை—தந்தையைப் பிரிந்து சிறையில் வாடியும்—துன்பங்களை இன்முகத்துடன் ஏற்றும் சொத்து சுகங்களை சொந்த இலாபங்களை இழந்தும் இனத்தின் சுதந்திரத்திற்காக போராடிய இயக்கம் போராடி வரும் இயக்கம் இ. த. அ. கட்சி!

கோப்பாய் கோமான் அமரர் வன்னிய சிங்கத்தின், வீ. ஏ. கந்தையா இராசவரோதயம் — ஏகாம்பரம், போன்ற தியாகிகளை வீரர்களை இன விடுதலைப் போரில் பலி கொடுத்த கட்சி இ. த. அ. கட்சி!

கொடியைக் காக்க குண்டடிபட்ட வீரன் திருமலைத் தியாகி நடராசன்-மட்டுநகர் இராசேந்திரன்-கொடிகாமம் வேலு ஐயா—நாதைப் பறி கொடுத்த தாமரைக்குளம் செல்லையா ஜீப்புக்கு குறுக்கே படுத்த பழனி, இராணுவத்தின் துப்பாக்கிக்கு தன்மார்பைக் கொடுத்த தொழிலாளத் தோழர்கள் ஐயாவு—பிரான்ஸிஸ் போன்ற எண்ணற்ற தியாகிகளை உருவாக்கிய கட்சி—இ. த. அ. கட்சி!

தமிழினத்தின் சொந்த பட்சக் கோரிக்கைகளைக் கூட அலட்சியப் படுத்திய யூ. என். பி. ஆட்சியை 1960ம் ஆண்டு மண் கவ்வச் செய்த கட்சி இ. த. அ. கட்சி!

உலகம் பிரமிக்கத் தக்க முறையில் அண்ணல் காந்தியே உயிருடன் இருந்திருந்தால் ஆசிவழங்கக் கூடிய முறையில்-மக்கள் சக்தியைத் திரட்டி கடமை - கண்ணியம் கட்டுப்பாடு தவருது 1961ம் ஆண்டு இருமாதங்களாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தினை நடத்தி ஈழத்தின் ஆட்சிச் சக்கரத்தையே ஸ்தம்பிக்க வைத்தகட்சி இ. த. அ. கட்சி!

வட கிழக்கு மாகாணங்களில் இரு மாதங்களாக ஆட்சியே நடைபெறவில்லையென்று இலங்கைப் பிரதமர் திருமதி பண்டார நாயக்காவே ஒப்புக் கொள்ளும்படி வைத்த சக்தி வாய்ந்த கட்சி. இ. த. அ. கட்சி!

தமிழ் கூறும் நல்லுலகிலேயே முதன் முதலாகத் தனித்தமிழ் முத்திரைவெளியிட்டு அஞ்சலகம் நடத்தி—இலங்கை அரசாங்கத்தின் சட்டத்தையே மீறிய கட்சி இ. த. அ. கட்சி!

இப்போராட்டத்தின்மூலம் தனிச் சிங்களத்தைத் தமிழ் பகுதியில் திணித்தே தீருவோம் என்று அகங்கார வெறிபிடித்து நின்ற சிங்கள ஆட்சியை ஓட ஓட விரட்டியடித்த கட்சி இ. த. அ. கட்சி!

1964ம் ஆண்டு கூட்டரசாங்கம் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறித்தெடுத்து இந்நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைக்கு வேட்டு வைக்கும் தவருன பாதையில் சென்ற போது அந்த அரசாங்கத்தை வீழ்த்தி—இந்நாட்டில் ஜனநாயக மரபைக் கட்டிக் காத்தது இ. த. அ. கட்சி!

தமிழினத்தின் எந்தக் கோரிக்கைகளை யூ. என். பி ஆட்சி 1960ம் ஆண்டு திமிருடன் ஏற்க மறுத்ததோ அதே கோரிக்கைகளை வழங்குவதாக 1965ம் ஆண்டு ஒப்புக் கொள்ள வைத்த கட்சி இ. த. அ. கட்சி!

சிறிமா—சாஸ்திரி உடன்படிக்கைச் சட்டத்திலும் அடையாள அட்டைச் சட்டத்திலும் தமிழ்ப் பேசும்

---

# வெற்றி தந்தைக்கே!

தந்தையை வெல்வோமென்று
தாங்களும் கச்சை கட்டி
வந்தவர் மூவர் பான்மை
வரிசையாய் நானுரைப்பேன்,
சுந்தரர் அரை வேக்காடு,
சொத்தினைப் புகழாய் மாற்றச்
சிந்தையில் எண்ணங் கொண்ட
திருநாவுக்கரசு பாவம்!

பொன்னரோ நல்லர், பேச்சில்—
பொதுத்தொண்டில் வல்லர்,
ஆனுல்
அன்னவர் தோழர் கொள்கை
அருந்தமிழ் அழித்தலொன்று!
முன்னர் நம் அரசாண்ட
முத்தமிழ் நிலங்களெல்லாம்
தென்னகச் சிங்களர்க்குத்
தீர்த்தளித்திடுதல் இரண்டு!

சிங்களம் படித்தல் வேண்டும்
செந்தமிழினத்தோர் என்னல்,
தங்கமே எங்கள் பொன்னர்
தம்முடைத் தலைவர் கொள்கை!
சிங்களம் மட்டும் கொண்டு
செயற்படு (ம) நீதிச்சேவை,
இங்கிவர் கொள்கை நான்கு!
இன்னுமுண்டியம்புவேனே!

புத்தரின் மதமே இந்தப்
பூமியில் ஆட்சி கொள்ளும்
தத்துவம் அளித்தல் பொன்னர்
தம்முடைத் தோழர் கொள்கை.
பித்தர்கள் செயலில், பேச்சில்
பேணுதல் வகுப்பு வாதம்!
எத்தர்கள் கொள்கை சொன்னேன்,
ஏற்பீரோ கூட்டுக்கட்சி?

தந்தைக்கு வாக்குத் தந்து
தமிழன்னை சிறையை நீக்கச்
சிந்தையில் உறுதி கொள்க!
செல்வநாயகமே வெல்க!
முந்திய வேந்தர் மூவர்
முறைமையின் ஆட்சி செய்த
நந்தமிழ் நிலத்து மீண்டும்
நாம்தமிழ் அரசு காண்போம்!

—நுயினை சிவம்—

தலைமை தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

எதிர்பாருங்கள்......
தினபதியாருக்கு
காணிக்கை
?
சுதந்திரனில்...

# இஸ்லாமியர்களைக் கொல்ல அமெரிக்கா இஸ்ரேலுக்கு 130 விமானங்களை வழங்கும்! கெய்ரோ பத்திரிகை 'அல் அஹ்ரம்' தகவல்!

## 'இலங்கை அமெரிக்க நட்புறவுச் சங்கத்தின்' தலைவரான தேவநாயகமே!

### இஸ்லாமியரிடம் வாக்குகேட்க உனக்கு என்ன துணிச்சல்!

இஸ்ரேலுக்கு 130 இராணுவ ஹெலிகொப்டர் விமானங்களை வழங்குவதற்கு அமெரிக்கா சம்மதித்துள்ளதாக கெய்ரோவின் அதிகாரபூர்வமான ''அல் அஹ்ரம்'' பத்திரிகை இன்று செய்தி வெளியிட்டுள்ளது. இவை துருப்புக்களை ஏற்றிச் செல்லும் வசதிபடைத்த 'எஸ். எச். 53' என்ற ரகத்தைச் சேர்ந்த ஹெலிகொப்டர் விமானங்களாகுமென அச்செய்தி கூறுகிறது.

கல்குடா தொகுதியில் இஸ்லாமியர்களிடம் 'உங்கள் வாக்குகளை எனக்குப் போடுங்கள்' என்று கேட்கும் தேவநாயகம் அவர்கள் ''இலங்கையர் அமெரிக்கர் நட்புறவுச் சங்கத்தின்'' தலைவர் ஆக இருந்து வருகிறார். அரபு இஸ்லாமியர்களைக் கொன்று குவிப்பவர்கள் இஸ்ரேலியர்கள்; இஸ்ரேலியர்களுக்கு போர் விமானம் கொடுப்பவர்கள் அமெரிக்கர்கள். அமெரிக்கர்களை இலங்கையில் இருந்து ஆதரிப்பவர் தேவநாயகம். தேவநாயகத்தை கல்குடா இஸ்லாமியர்கள் ஆதரிக்கலாமா? ஆதரிப்பார்களா? என்ன துணிச்சலில் தேவநாயகம் கல்குடா இஸ்லாமியர்களிடம் வாக்குகளைக் கேட்கிருரோ?

இஸ்லாமியர்களைக் கொல்ல இஸ்ரேலுக்கு அமெரிக்கா 130 போர் விமானங்களை வழங்கி இருப்பது பற்றிய செய்தி வீரகேசரி பத்திரிகையிலும் வெளிவந்திருப்பதை (24-5-70) இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

---

### தமிழ் மக்கள்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்த அம்சங்களை நீக்குவதற்குப் போராடி வெற்றி கண்ட கட்சி இ. த. அ. கட்சி!

மலையகத் தமிழர்களை சட்டாய நாடுகடத்தலுக்குட்படுத்துவதையும் தனி வாக்காளர் பட்டியலையும் நீக்குதற்கு மலைநாட்டுத் தமிழ்த் தலைவர்களுடன்சேர்ந்து கூட்டாக நடவடிக்கை எடுத்த கட்சி இ. த. அ. கட்சி!

பௌத்தபிக்கு ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட போதிலும் தமிழ் மொழிப் பிரமாணங்களை அரசாங்கம் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு மூல காரணமாக இருந்தகட்சி இ.த.அ. கட்சி!

அரசாங்கத்திலிருக்கும் போது தமிழ்ப் பிள்ளைகளின் போதனை மொழி தமிழே என்பதை அரசாங்கத்தை ஏற்கும்படி வைத்த கட்சி— இ. த. அ. கட்சி!

பழைய அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களத் தேர்ச்சி தேவையில்லை என்பதை அரசாங்கத்தைக் கொண்டு ஒப்புக் கொள்ளும்படி செய்து அவர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த—சம்பள உயர்வு போன்றவற்றைப் பெற்றுக் கொடுத்து அவர்களுக்கு வழங்கப்படவிருந்தகட்டாய ஓய்வுக் கடிதங்களையெல்லாம் வாபஸ் பெறச்செய்த கட்சி இ. த. அ. கட்சி!

புதிய ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் பலவற்றை உள்ளடக்கிய 701ம் திறைசேரிச் சுற்று நிருபத்தை அரசாங்கம் வெளியிடுவதற்குக் காரணமாக இருந்தகட்சி இ.த.அ. கட்சி!

இலங்கையின் அரசியல் வரலாற்றிலேயே முதல் தடவையாக மந்திரிப் பதவியைத் தாமே முன்வந்து உதறியெறிந்த அரசியல் கட்சி இ. த. அ. கட்சி!

பதவியைக் காட்டிப் பட்டத்தை நீட்டி தமிழ் அரசியல் தலைவர்களை விலைக்கு வாங்கி அடிமைகளாக வைத்துக் கொள்ளலாம் என்ற சிங்களப் பெரும்பான்மையினரின் எண்ணத்தில் மண்ணைப் போட்ட கட்சி இ. த. அ. கட்சி.

இந்துக்களின் வணக்கத்துக்குரிய கோணேசராலயத்தையும், தமிழர்களின்பாரம்பரிய பூமியாகிய திருமலையையும் எப்படியும் பாதுகாத்தே தீருவது என்று சபதமேற்றிருக்கும் கட்சி தமிழரசுக் கட்சி.

தமிழ் மக்கள் எந்த நெருக்கடி யேற்பட்டாலும் எத்தகைய இன்னல்கள் நேர்ந்தாலும் சமஷ்டி அரசியலின் கீழ் தமிழ் பிரதேசத்துக்கு சுய ஆட்சி பெறுவது என்ற தமது இலட்சியத்திலிருந்து இம்மியளவும் விலகமாட்டார்கள் என்பதை நிரூபித்து வரும் கட்சி இ. த. அ. கட்சி.

இலங்கையில் உண்மையான சனநாயகம் மலர வேண்டுமானல் அதிகாரம் பரவலாக்கப்படவேண்டும் —அந்தந்தப் பிரதேச மக்களிடம் அந்தந்தப் பிரதேசத்து நிர்வாகம் ஒப்படைக்க வேண்டும் காலனி ஆட்சி முறையான கச்சேரி முறை மாற்றியமைக்கப்படவேண்டும்—என்னும்கொள்கையை இந் நாட்டிலுள்ள சகல அரசியற் கட்சிகளையும் ஒவ்வோர் கட்டத்தில் ஏற்றுக் கொள்ளும்படி வைத்த கட்சி இ. த. அ. கட்சி

பிரதேச—மத வேறுபாடுகளின்றி தமிழ்ப் பேசும் மக்களுக்கு பூரணத்துவம் வாய்ந்த தமிழ் பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டுமென்ற கோரிக்கையை 1956ம் ஆண்டிலிருந்தே எழுப்பி வருவது இ. த. அ. கட்சி!

இப்படி—தமிழரசுக் கட்சியின் சாதனைகளையும்—பணிகளையும் கூறிக்கொண்டே போகமுடியும். இப்படிப்பட்ட கட்சிக்கு வாக்களிக்காமல் வேறுயாருக்கு தமிழர் வாக்களிப்பர்.

---

### வி. பொன்னம்பலம் கட்சியின் விஷமத்தனம்

இக்கேலிச்சித்திர பிரசுரம் இலங்கை கம்யூனிஸ்ட் (மொஸ்கோ) கட்சித் தலைமைக் காரியாலயத்திலுள்ள அச்சகத்திலிருந்து வெளியிடப்பட்டிருக்கிறது. சிங்கள மக்களின் கழுத்தைத் தமிழர்கள் அறுப்பதாகக் காட்டும் இப்படத்தைக் காண சிங்களவர்க்கு ரத்தம் கொதிக்கத்தான் செய்யும். இவ்வாறு சிங்கள இன வெறியைத் தமிழ் பேசும் மக்கள் மீது திருப்பிவிட எத்தனிக்கும் கம்யூனிஸ்ட் (கூட்டணிக் கட்சியாரின் சகாவான வி. பொன்னம்பலம் தமிழ்ப் பகுதியில் போட்டியிடுகிருர், 'கழுத்தறுப்பு வேலை' செய்யும் வெறியர்களுடனிருக்கும் வி. பொ.க்கும் 'கழுத்தறுப்பே' கிடைக்கும் என பொதுமக்கள் எண்ணுவதில் தவறில்லை!

---

### பொன்னம்பலமும் துரையப்பாவும்

யாழ்ப்பாணத் தொகுதியில் தமிழரசுவேட்பாளர்மாண்புமிகு மாட்டீனுக்குப் பெருகிவரும் பேராதரவை முறியடிக்கக் கங்கணம் கட்டி செய்யத்தகாத, காறி உமிழத்தக்க செயல்களில் பலர் ஈடுபடுவதாக அறிகிறோம்.

இனத்தைக் காட்டிக் கொடுத்த பொன்னம்பலமே எதையும் செய்து தேர்தலில் வெற்றி வாகை சூடி விடலாம் என்று நம்பாதே!

உடுகமவுக்கு ஆட்சி மன்றத்தில் வக்காலத்துப்பேசிய துரையப்பாவே! உனது அரசியல் வரலாறு தமிழர் சரித்திரத்தின் கறையிருள்படிந்த காலமென்பதை மறந்து கொட்டம் அடிக்காதே!

யாழ்ப்பாணத்தொகுதி மக்கள் ஏமாளிகளல்லர்; எதிர் வரும் 27ல் வாக்காளப் பெருமக்கள் உங்கள் இருவருக்கும் அரசியல் சாட்டையடி கொடுக்கப் போகிருர்கள். ஓடோடி அரசியல் சாக்கடையிலே ஒதுங்கப்போகும் நீங்கள் வாலாட்டினுல், வாலிபர்கள் தமிழரசு பாசறை வீரர்களிடம் அகப்பட்டுத் தவிக்க நேரிடும் என்று எச்சரித்து வைக்கின்றோம்.

---

இப் பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இல்லத்தில் 1970-ம் வருடம் மே மாதம் 26-ம் திகதி செவ்வாய்க் கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

ஆசிரியர்: கோவை மகேசன்.



## பெரியவர்

எங்களுக்கு முன்னலே பறந்து செல்கின்ற தலைமைப் பறவை அது!

நாங்கள் மரியாதையாகப் பின்தொடர்கிறோம்......

எங்கள் பயணத்தில் நாங்கள் என்றைக்குமே சிதறிப் பறந்ததில்லை.

அம்புகள் எங்களைத் துளைத்ததும் குருதியை நாங்கள் சிந்தியதும் பலதடவைகள் நிகழ்ந்த சம்பவங்களே!

எங்களில் மிக மென்மையான சிலர் பயணத்தில் நடுவே காயங்களோடு துடித்து மாண்டதை நாங்கள் எங்கள் கண்களாலேயே கண்டோம்;

அப்போது ''தமிழினத்துக்காக நாங்கள் மடிகிறோம்'' என்று அறிவித்து விட்டே அந்த சகோதரப் பறவைகள் செத்தன.

பயங்கரமான நிகழ்ச்சிகளையெல்லாம் அனுபவித்தோம் என்பது உண்மையே!

ஆனலும் நாங்கள் கொஞ்சமும் கலங்கியதில்லை...... கொஞ்சமும் குழம்பியதில்லை;

வரிசை முறியாமல் எங்கள் தலைவனின் பின்னல் ஒழுங்காகப் பறந்து போகிறோம்!

'பெரியவர்' என்றே அவர் எங்களால் அழைக்கப்படுகிருர்;

ஈழத்தமிழனின் சுதந்திரம் பற்றிய கவிதையை முதன்முதல் எங்களுக்குக் கற்றுக் கொடுத்தவர் அவரே!

அந்தக் காலத்தில் எங்களுக்கு ஒன்றுமே தெரியாது. அப்போதுதான் பெரியவர் வந்தார்;

அடிமை என்பவன் பூமியில் 'உயிர்' என்ற பெயரைத் தாங்குவதற்கே அருகதை அற்றவன் என்று அவர் சொன்னர்.

பெரியவரின் கால்கள் ஈழத்தமிழனின் நன்மைக்காக இறங்கி நடைபோடக் கண்டோம்!

''தமிழரசே நமது மூச்சு'' என்று பெரியவர் வைரமாக உச்சரித்தார்.

கம்பீரமான பெரியவரின் மந்திரத்தில் நாங்கள் கட்டுப் பட்டோம்!

பெரியவர் எங்கள் சுவாசமானர்.

எதை எங்கள் பெரியவர் கூறுகிருரோ அதை உடனே நிறைவேற்ற இப்போது நாங்கள் தயார் ஆனவர்கள்.

'செல்வா' என்ற எங்கள் பெரியவர் 'செல்' என்று கட்டளையிட்ட இடத்துக்குச் செல்லவும் 'வா' என்று அழைப்பு விட்ட இடத்துக்கு வரவும் பழகிப்போனேம்.

நாங்கள் பெரியவருடையவர்களே!

பெரியவர் தூய ஆன்மா ஒன்றை வைத்துக் கொண்டிருக்கிருர்......... அதனல் நாங்கள் வேறிடம் பெயர எந்த நியாயமுமே இல்லை!

அருமையான எங்கள் பெரியவரைப் பற்றி பெருமையான பல சங்கதிகளை நேரே எங்கள் கண்கள் கண்டு வந்திருக்கின்றன.

சுகமான தனது மாளிகையை விட்டு சுகங்கெட்ட தமிழினத்துக்காக உழைக்க பெரியவர் வீதிக்கு வந்தார்!

தமிழன் சிறையில் இருக்கக் கூடாது என்பதற்காக பெரியவர் சிறையில் இருந்தார்!

தமிழனையின் நோய்தீர்க்க ஓயாது உழைத்து பெரியவர் நோய் தாங்கினர்!

அதிகம் பேசாத பெரியவர் அதிகம் செய்தார்!

இதோ பெரியவரின் பின்னே வரிசையாக நாங்கள் பறந்து செல்கிறோம்!

நாங்கள் தமிழ்ப்பறவைகள்!
எங்களுக்கு அவரே தலைவர்!

''செல்வாதாசன்''